**கஹவத்த பிரதேச சபையி - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கஹவத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கஹவத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 5 நிர்மாண வேலைகளுக்கான ரூபா 2,966,000 இற்கான ஒப்பந்த வேலைகள் மூலதனப்படுத்தப்பட்டு இருந்து. | 2023 ஆண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமைய ால் மூலதனப்படுத்தப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இருமாடி வர்த்தக தொடர்கட்டிடம் ஒன்றின் நிர்மாண வேலைக் கிரயம் ரூபா 9,730,708 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(5) இன் படி 2011 மற்றும் 2017 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 93,175 இற்கான 02 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய தலைவரிடம் மற்றும் முன்னைய செயலாளரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,089,616 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,223,912 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,720,912 | 5,274,126 | 5,187,883 | 1,533,354 | 4,431,325 | 4,264,740 | 4,125,125 | 1,547,410 |
| வாடகை | 10,388,400 | 11,352,655 | 11,378,240 | 772,419 | 9,093,792 | 8,477,967 | 7,860,617 | 1,156,849 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,264,000 | 1,068,185 | 1,050,585 | - | 1,035,000 | 1,127,066 | 1,094,466 | - |
| ஏனைய வருமானங்கள் | 3,509,000 | 2,183,410 | 2,445,052 | - | 2,617,000 | 1,891,537 | 1,464,743 | - |
| | 19,882,312 | 19,878,356 | 20,061,760 | 2,305,773 | 17,177,117 | 15,761,310 | 14,544,951 | 2,704,259 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ரூபா 1,009,208 தொகைக்கான நிலுவை வீதவரி மீதியில் 5 வருடங்களை விட பழமையான ரூபா 232,226 இற்கான மீதியொன்று காணப்பட்து. | அறவீடு செய்வதற்கு முடியாத மீதிகளை பதிவழிப்பதற்கும், நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 77,295 தொகைக்கான நிலுவை ஏக்கர் வரி மீதியில் 5 வருடங்களை | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்குத் தேவையான | நிலுவை வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | விட பழமை வாய்ந்த ரூபா 69,753 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பொதுச் சந்தையின் மேல் மாடி பெறுமதி மதிப்பீடொன்றின்றி 2021 ஆகஸ்ட் முதல் ரூபா 36,000 இற்கான மாதாந்த வாடகை ஒன்றிற்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 72,000 தொகை குறைவாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. வாடகையாளர் 2023 மே மாதத்தில் கட்டிடத்திலிருந்து அகன்றிருந்த போதிலும் ரூபா 518,000 தொகை இதுவரை அறவீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | முன்னர் இருந்த வாடகையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பெண் சட்டவரைஞருக்கு கோவைகள் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன் ஒரு மாதத்திற்கான உடன்படிக்கை பிணையும் நிலுவை வாடகைக்கு பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடை வாடகை தீர்மானித்தல், உடன்படிக்கை மேற்கொள்ளல் போலவே மாதாந்தம் வாடகையை அறவீடு செய்தலும் முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வாராந்த சந்தையின் மேல் மாடி பெறுமதி மதிப்பீடு ஒன்று இன்றி 2020 செப்தெம்பர் முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகைக் காலத்தை பிழையான முறையில் குறைத்திருந்தமையால் சபை ரூபா 450,000 இற்கான வருமானம் ஒன்றினை இழக்கப்பட்டிருந்தது. அதன் மாதாந்த வாடகை ரூபா 50,000 தொகை என 2023 ஜூலை மாதம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட வாடகையினை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் படி கட்டிடம் வழங்கப்பட்டது. முன்னர் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை பின்னர் ஒருநாள் கையொப்பம் இடப்பட்டமையால் அழிக்கும் திரவத்தை பயன்படுத்த நேரிட்டிருந்தது. | கட்டிடங்களை வாடகைக்கு கொடுத்தல் முறையான செய்முறை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். பிழையான முறையில் வாடகையை குறைத்தல் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 22 நிறுவனங்களுக்கு சொந்தமான 58 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 316,487 இற்கான கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 4 நிறுவனங்களுக்குரிய அறிவித்தல் பலகைக் கட்டணம் தற்போது அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைபேசி செலுத்துகை கோபுரங்கள் இனங்கண்டு கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முககாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கஹவத்த, ஹவுபே தோட்டத் தொகுதியில் குப்பைகளை அகற்றும் சுமார் 4 ஏக்கர் தரைப் பிரதேசம் 2023 திசெம்பர் அளவிலும் சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | காணிப் பகுதி அளவை மேற்கொண்டு வேறாக்கப்பட்டதுடன், நில அளவைப் படம் உரிய அமைச்சின் மூலம் தோட்ட முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வருடாந்தம் சுமார் 360 மெற்றிக் தொன் மாத்திரம் சுற்றாடல் நேயத்துடன் அகற்றப்பட்டிருக்கவில்லை. | முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு தேவையான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | முறையான குப்பை முகாமைத்துவ திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 30 திகதிய 2313 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் இருந்து வரி அறவீடு செய்திருக்கவில்லை. | கணிப்பீட்டு அலுவல்கள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும். | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளிலிருந்த வரி அறவீடு செய்யப்பட வேண்யுள்ளது. |
| (ஆ) | அனுமதிப்பத்திரங்கள் இன்றி நடாத்தப்படும் 04 இறைச்சி மற்றும் மீன் கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | இந்த அங்கீகாரமின்றிய இடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துணைவிதிகளின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்யுள்ளது. |
| (இ) | 313 நீர் நுகர்வோர்களை அடங்கிய எந்தான நீர் செயற்திட்டம் நீரின் தரம் தொடர்பாக 13 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் இது வரை அது தொடர்பாக தரப் பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | சுத்திகரிப்பு அலகு ஒன்று தயாரிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | குடிநீரின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

## 3.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பொது வேலைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த 1½ ஏக்கர் விசாலமான காணியில் பயிர்செய்கை மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு 2022 ஜூலை மாதம் சபை தீர்மானித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் அளவிலும் அந்தக் காணிகள் விளைவற்றுக் காணப்பட்டது. | காணியில் காணப்படும் இறப்பர் மரங்களில் இருந்து கிடைக்கக் கூடிய மாதாந்த வருமானத்திலிருந்து ரூபா 4,000 தொகை சபைக்கு செலுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் அதனை செயற்படுத்த முடியாமல் போனது. | காணியை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 77,248,466 தொகைக்கான காணிகள் கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை உரிய சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணியிருக்கவில்லை. | அனைத்து விபரங்களும் அடங்கிய அட்டவணை ஒன்றின் மூலம் தகவல்களை நாளதுவரை ஆக்கி பேணிச் செல்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

## 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் மாதம் நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த வாகனம் ஒன்றின் உரிமையை உரித்தாக்கி இருக்கவில்லை. அதே போல் 2022 ஆண்டு முதல் அதன் என்ஜின் இயக்கமின்றி காணப்பட்ட போதிலும் திருத்த வேலை மேற்கொண்டிருக்கவில்லை. | விண்ணப்பித்த போதிலும், இது வரை உரிமையை உரித்தாக்கி இருக்காமையால் பாரிய செலவொன்று மேற்கொண்டு மற்றவர்களுக்கு சொந்தமான வாகனம் ஒன்றின் திருத்த வேலை மேற்கொள்ளல் சிக்கல் தன்மையுடன் காணப்படுகின்றது. | உரிமையை உரித்தாக்கி வாகனத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு அல்லது மாகாண சபைக்கு திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ஆ) | ஓட்ட நிலையில் காணப்படாத 2 டிரக்டர் வண்டிகள் மற்றும் 4 டேலர் வண்டிகள் அப்புறப்படுத்தும் அலுவல்கள் 2023 திசெம்பர் வரை | இந்த வாகனங்கள் ஏல விற்பனை செய்ய வேண்டிய நிலைமையில் காணப்படுவதனால் அதற்கு | இலக்கம் 05/2020 மற்றும் 2020 ஒக்தோபர் 02 திகதிய |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சாக்கடைகளை அகற்றுவதற்காக தேவையான வசதிகள் காணப்படாமையால் 2015 ஆண்டில் நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த சாக்கடை பவுசர் கிடைத்த நாள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | குப்பைகளை அகற்றும் காணி சபைக்கு கிடைத்த பின்னர் சாக்கடையை அகற்றுவதற்கு ஆரம்பிக்கப்படும் என. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |